**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 261/2021**

**Prosecution Witness: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Arunadevi | Caste | : |
| Father 's Name | : Karuppaiah | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**13.10.2023**
**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரது பெயர் முருகதாஸ் ஆகும். நாங்களும் ஆஜர் எதிரியும் குடும்ப நண்பர்களாக இருந்து வந்தோம். 2012 வது வருடத்தில் ஆஜர் எதிரிக்கு உடம்பு சரியில்லை என்றும் அதனால் வேலைக்கு செல்லவில்லை என்றும் அதனால் அவரது மகளின் படிப்பு செலவுக்காக ரூ.50000/- ஆஜர் எதிரிகேட்டதின் பேரில் நானும் எனது கணவரும் அவருக்கு பணம் கொடுத்தோம். இரண்டு வருடங்களாக என்னிடம் வாங்கிய பணத்தை அவர் எனக்கு தரவில்லை. ஆஜர் எதிரியை வீட்டிலேயே பார்க்க முடியவில்லை. எனவே அவர் வேலை செல்லும் இடமான பெரியார் பேருந்து நிலையம் சென்று ஆஜர் எதிரியை எனது கணவர் 2014 ல் பார்க்க சென்றார். ஆஜர் எதிரி அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணி செய்து வருகிறார். பணத்தை எனது கணவர் கேட்டதற்கு ஆஜர் எதிரி சரியாக பதில் கூறவில்லை என திரும்பி வந்துவிட்டார். மறுநாள் 17.02.2014 அன்று எனது கணவர் ஆஜர் எதிரியிடம் போனில் பணத்தை கேட்டதற்கு தகாத வார்த்தைகளால் ஆஜர் எதிரி எனது கணவர் திட்டினார். அதே நாள் மாலை நேரத்தில் பெட்ரோல் போட்டுவிட்டு மீண்டும் முத்துமாரியம்மான் கோவில் வழியாக திரும்ப வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி நான் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை வழிமறித்து என்னை ஜாதியை சொல்லி பள்ளமுண்ட என திட்டினார். பெண்களை பேசும் கெட்ட வார்த்தையால் என்னை திட்டி கல்லை தூக்கி எறிய வந்தார். அவர் கல்லை தூக்கியதும் நான் பயந்து சத்தம் போட்டதும் அருகே விறகு வெட்டிக் கொண்டிருந்த தங்கவேல், மலைச்சாமி ஆகியோர்கள் வந்து எதற்காக பொம்பளையை சத்தம் போடுகிறாய் என கேட்டார்கள். ஆஜர் எதிரி அங்கு இருந்து சென்றுவிட்டார். நானும் கிளம்பி வந்துவிட்டேன். வீட்டில் வந்து என் கணவரிடம் நடந்த சம்பவத்தை பற்றி கூறினேன். மறுநாள் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் நான் புகார்

கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடைய கையெழுத்து தான். மேற்படி புகாரை நான் தான் எழுதினேன்.அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி, இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 261/2021**

**Prosecution Witness: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : தொத்தன் | Caste | : |
| Father 's Name | : முனியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**13.10.2023**
**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் திருச்சி ஏர்போட்டில் தீயணைப்பு துறையில் மேற்பார்வையாளராக பணி செய்து வருகிறேன். அ-சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி முருகதாஸ் எனது பக்கத்து வீட்டில் குடியிருந்த ஆவார். சம்பவ சமயத்தில் நாங்கள் பிரேம் நகரில் குடியிருந்தோம். 2014 வது வருடம் ஒரு நாள் எனது மனைவியிடம் ஆஜர் எதிரி ஏர்போட்டு காலனி அருகில் உள்ள முத்துமாரியம்மன் கோவில் அருகே வைத்து மாலை 3.45 மணியளவில் எனது மனைவி சென்று கொண்டிருந்த இருசக்கர வாக னத்தை மறித்து உனது கணவர் பணம் கொடுத்ததை அடிக்கடி கேட்டு பெரியார் பேருந்து நிலையம் வருவதும் எதிரியின் 2 வது மனைவி வீட்டிற்கு சென்று பணம் கேட்பதுமாக தொல்லை பண்ணுகிறார் என கூறியதும் எனது மனைவி வண்டியை எடுக்க முற்பட்டவுடன் எதிரி பள்ளமுண்ட என ஜாதியை சொல்லி திட்டியும் மேலும் சொல்லத்தகாத வார்த்தைகளால் திட்டியதாக என் மனைவி என்னிடம் சொன்னார். மறுநாள் சென்று சம்பவம் குறித்து எனது மனைவி புகார் கொடுத்தார். நானும் எனது மனைவியுடன் காவல் நிலையம் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**